15

கம்பர் காலவாராய்ச்சி.

ஆசிரியர்,

இளசை, ஸ்ரீ திருமலைச்சா

[பதிப்புரிமையுளது.]

ரிலால் பிரஸ், திருநெல்வேலி.

1930.

கம்பர் காலவாராய்ச்சி.

புராதன இந்தியாவின் ஆசிரியர் கம்பரைப் பன்னிரண்டாவது நூற்றாண்டினராகவே பதித்துள்ள உண்மை அந்நூலின் பலவிடங்களிலும் படிப்பவருக்கு இனிது விளங்கும். கடைசியில் அப்புத்தகத்தில் சேர்த்துள்ள (Notes) குறிப்புகள் பதிந்துள்ள 415-ஆவது பக்கத்தில் கீழ்க்கண்டவாறும் குறித்திருக்கிறார்:

(4) Pages 153, 378 and 400 : Kamban had been regarded as a poet of the tenth century A. D. on the strength of certain stories connected with his life. It is more likely he belonged to the thirteenth century for the following reasons among others:—

1. He refers to a chola king Tyagamavinodhan (who seems to be Vikrama chola.)

2. His contemporaneity and hostility to Ottakuttan seems provable.

3. There is one story which connects him with Pratapa Rudra of Warangal.

பக்கங்கள் 153ம், 378ம், 400ம் கம்பரது ஜீவியத்தை யொட்டிய கதைகள் சில உண்டு. அவற்றின் பலத்தைக்கொண்டு கம்பர் பத்தாவது நூற்றாண்டின் புலவரில் ஒருவராகக் கணிக்கப்பட்டிருக்கின்றார். பதின்மூன்றாவது நூற்றாண்டினராகக் கம்பரைக் கருதக் காரணங்கள் பல உள வாதலின் அந் நூற்றாண்டினராக அவரை நாட்டுவது மிகவும் பொருத்தமானது. அவற்றுட் சில கீழ் வரைந்துள்ளன:

1. சோழவரசன் ஒருவனை அவர் தியாகமாவினோதன் என்று சுட்டிக் காட்டுகிறார். (அவன் விக்கிரம சோழனாகக் காணப்படுகிறான்.)

ஒட்டக்கூத்தருக்குக் கம்பர் ஏககாலத்தினராகவும் பகை கொண்டவராகவும் விளங்கிய உண்மைகள் மெய்ப்பிக்கக் கூடியன வாகக் காணப்படுகின்றன.

3. வாரங்கல் அரசனான பிரதாபருத்திரனோடு கம்பரை இணைக்கின்ற கதையொன்று வழங்கி வருகிறது.

இம் மூன்று காரணங்களாலும் அவர் பதின்மூன்றாவது நூற்றாண்டினர் என்பது ஆசிரியரது முடிபாகவும் தோன்றுகிறது. உண்மையை ஒருவாறு ஆராய்ச்சி செய்வோம்.

சோழவரசன் தியாகமாவினோதன். இவனைப்பற்றிய கம்பராமாயணக் கவியை இங்கே குறிக்கவேண்டியது இன்றியமையாததாதலின் அதனையும் கீழே குறித்திருக்கிறேன்.

வன்னிநாட் டியபொன் மௌலி
வானவன் மலரின் மேலான்
கன்னிநாட் டிருவைச் சேருங்
கண்ணனு மாளுங் காணி
சென்னிநாட் டெரியல் வீரன்
தியாகவினோதன் தெய்வப்
பொன்னிநாட் டுவமை வைப்பைப்
புலன்கொள நோக்கிப் போனான்.

இக்கவி கம்பராமாயணத்தில் யுத்தகாண்டத்தில் மருத்துமலைப் படலத்தின் 58 ஆம் பாடல்; ஆசிரியர் குறித்துள்ள பாடமும் இதுவே. 'மா' என்னும் எழுத்துத் தோன்றியுள்ள ஆசிரியர் பாடம் எப்பிரதியிலுள்ளதென்று தெரிய இடமில்லை. வேறு பாட பேதங்கள் அப்பாடற் பதிப்பிற் காணப்படவுமில்லை. இப்பாடலிலேதான் 'தியாக வினோதன்' என்னுந்தொடர் விக்கிரமனைக் குறித்திருக்கிறதென்று கருதியே ஆசிரியர் தம் புராதன இந்தியாவில் விக்கிரமசோழனைக் குறித்து, விக்கிரமசோழ அகளங்க தியாக சமுத்திரம் என்று வரைந்துள்ளார். (Vikrama Chola Akalanka Tyagasamudram) தியாக சமுத்திரம் என்ற திருநாமம் ஒட்டக்கூத்தரியற்றியுள்ள விக்கிரம சோழன்

உலாவின் 216, 332-ஆவது கண்ணிகளில் விளியில் ஆளப்பட்டிருக்கின்றன. விக்கிரமசோழன் முதலாவது குலோத்துங்கனுக்கு மகன். முதலாவது குலோத்துங்கனுக்கு அபயன், அகளங்கன், சயதரன், சயதுங்கன், உபயகுலோத்துங்கன், விசயதரன், வீரதரன் என்னும் பல பெயர்கள் உண்டு. அவனே கி. பி. 1070-ல் சோழ சக்கரவர்த்தியானான். அவன் காலத்துப் போரே கலிங்கப்போர். *(1095, 1112) அவன் காலத்துப் புலவரே ஜயங்கொண்டார்.

Jayamkondan was his Kavichakravarthi and possibly the commentator of Silappadhikaram, Adiyarkunallar did not live much later, as he quotes twice from Jayamkondam, once acknowledging the authority by name and another time by the simple Kavichakravarti. This would have been far from clear, if made much after Jayamkondan's time as there were other Kavichakravartis in the interim.

P. 150, Ancient India

By Dr. S. Krishnaswamy Aiyengar, M. A.

ஜயங்கொண்டார் அவன் காலத்துக்கவிசக்கரவர்த்தி. சிலப்பதிகார உரையாசிரியர் இச் சக்கரவர்த்தி காலத்துக்கு அதிகம் பிந்தின காலத்தரல்லர்; ஏனெனின் தமதுரையில் ஒரு இடத்தில் 'ஜயங்கொண்டார்' என்றும் மற்றொரு இடத்தில் அவரையே சக்கரவர்த்தி யென்றும் குறித்திருக்கிறார். ஜயங்கொண்டாருக்கும் அடியார்க்கு நல்லாருக்கும் இடையிட்ட காலத்தில் பல சக்கரவர்த்திகள் ஜீவித்திருந்தார்கள் என்னும் உண்மையானும் தனியே சக்கரவர்த்தி யென்று ஜயங்கொண்டாரையே சுட்டியிருத்தலானும் இன்னோர் இருவருக்கும் இடையிட்ட காலம் அதிகப்பட்டிருக்க இடமில்லை என்பது இனிது தெளிவாகும்.

அவரே முதற் கவிச் சக்கரவர்த்தி. அவர் பாடியது கலிங்கத்துப்பரணி. அதைப் புனைந்தவன்தான் முதலாவது குலோத்துங்கன்.

குலோத்துங்கன் முதலாமவனைக் குறித்து புராதன இந்தியாவின் நூலாசிரியர் தம் நூலின் 182-ஆவது பக்கத்தில்

"One such act of clear-sighted Statesmanship, it is, that got Kulottunga, the first, the popular sobriquet of Sungandavirtachola (the chola who abolished the tolls), which is handed down to us in a suberb of that name in Tanjore town". என்றும் வெளியிட்டுள்ளார்.

அவனது அரசாட்சிக் காலம் கி. பி. 1070 முதல் 1118 வரை இவ்வுண்மைகள் புராதன சாசனவாராய்ச்சியாளரானும் காவிய வாராய்ச்சியாளரானும் துணிந்துறுதிப்படுத்திய முடியாம்.

அவனுக்கு மகனே விக்ரமன். இவ்வுண்மை விக்கிரமசோழனுலாவின் கண்ணிகளானினிது விள்ங்கு மதனால் அவற்றையுங் கீழே வரைகின்றேன்.

"தொல்லை மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி—யறத்திகிரி
வாரித் திகிரி வலமாக வந்தளிக்கு
மாரிற் பொலிதோ ளபயற்குப் பார்விளங்கத்
தோன்றிகோன் விக்கிரம சோழன்"

இவன் அரசாண்ட காலம் 1118 முதல் 1135 வரை என்பது சரித்திர வாராய்ச்சியின் முடிபு; எனினும் பல புலவர்கள் 1132 வரை என்று எழுதியிருக்கிறார்கள். எவ்வாறேனும் பன்னிரண்டாவது நூற்றாண்டின் முற்பாதியினன் என்பது தேற்றம்.

2 But since a man is known by the company he keeps, it is important to note that Shakespere's friends included not only earls on the one side and country tradesmen on the other, but also the greatest writers of the time.

Shakespere, The Man and his stage.
By LAMBORN & HARRISON.

SEP 1930

என்று ஜகப்பிரியரைப்பற்றி எழுதியிருக்கிறார்களல்லவா? கம்பரைப்பற்றி எண்ணும்போதும் அத்தகைய தீர்மானம் அனுமானத்திற்குரித்து. அவரது காலத்திலும் ஆற்றல் சான்ற அருந்தமிழ்ப் புலவர்கள் திகழ்ந்திருக்கின்ற உண்மை சரித்திர ஆராய்ச்சியாளருக்கும் காவிய ஆராய்ச்சியாளருக்கும் இனிது விளங்கும். புராதன இந்தியாவின் ஆசிரியர் Page 153. "The period between A. D. 1118 and A. D. 1178 is occupied by four rulers. Their period was one of the considerable literary activity. Sekkilar, Kamban, Ottakuttan, Pugalendhi and possibly Adiarkkunallar were names that any age might be well proud of". என்று எழுதியிருப்பதோடு ஸ்ரீ. உ. வே இராகவையங்கார் ஸ்வாமி திருத்தக்கதேவரும் கம்பரும் என்ற தலைச்சாத்துள்ள கட்டுரையில் செந்தமிழ் நான்காந் தொகுதி முதற்பகுதி ஆறாவது பக்கத்தில், "கம்பரது காலம், ஜயங்கொண்டார், சேக்கிழார்நாயனார், புகழேந்திப் புலவர், ஒட்டக்கூத்தர் முதலிய கவிவேந்தர்கள் எல்லாம் அரிய பெரிய நூல்களைப் பாடி அழியாப் புகழ் நிறுத்திய காலமாம். கம்பர் இவர்கள் அறிவை எல்லாமும் அளந்து அறிந்து கொண்டவருமாவர்" என்று வெளியிட்டருளியுள்ளது ஒருவாறு ஒப்புடைத்து. மேலும் வடமொழி வல்லுநரும் வாழ்ந்திருந்து புகழ்கொண்டதாகவும கல்விச்சாலைகளும் பட்டி மண்டபங்களும் பரவிய தக்காலத்திலேயே யென்றும் 'India's Past' என்னும் நூலினாசிரியரும் குறித்துள்ளார். வின்செண்ட் ஸ்மித் துரை அவர்களும் இக்கருத்துக்கு உடன்பாடுடையவரே; கம்பரது 'விழுந்த ஞாயிறு எழுவதன் முன்மறை வேதிய ருடனாராய்ந்து" என்னும் திருவாக்கும் இதற்குச் சான்றாம்.

இவர்களுக்கு ஏக காலத்தினரான நல்லிசைப் புலமை மெல்லியலார் ஔவையார், சேரமான் பெருமாணாயனாரோடு கயிலாயஞ் சேர்ந்ததாகக் கூறப்பட்ட பின்னர் முதல் ஔவையாரைப்பற்றி வேறு விருத்தாந்தம் காணப்படவில்லை. அன்னார் திருவள்ளுவருக்கு உடன்பிறந்தவர். ஆகவே, கி. பி. இரண்டாவது நூற்றாண்டினர். புறநானூற்றுச் செய்யுள் முதலியவற்றாற் றுணியப்படும்

நெல்லிக்கனியுண்டு நெடு வாழ்வுபெற்ற வுண்மை கதைகளான்
விளங்கும். இரண்டாவது ஔவையார் வேறு. இவரது வேறு
பாட்டை விளக்க ஆங்கில வுரை யொன்றும் கருவியாகிறது.

"Avvaiyar who is reckoned by Doctor Caldwell himself as a contemporary of Kamban and is placed therefore in the twelfth century. * * *

அதாவது கம்பருடன் ஏககாலத்தில் வாழ்ந்திருந்த வுண்மையால்
கால்டுவெல்துரை அவர்களாற் பன்னிரண்டாவது நூற்றாண்டின
ராகக் கணிக்கப்பட்டுள்ள ஔவையார்—

'The Ten Tamil Idyls'
By PRO. P. SUNDARA PILLAI, M. A.

There were two poetesses kuown by the name of Avvaiyar of the Sangam age who, was brought up by a Pana ("நரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியில் பாணரகத் தில் ஔவை வளர்ந்தனள்" என்னும் கபிலர் வாக்கும் இவ்வுண் மைக்கு ஓர் சான்றாம்.) family and who claimed a brotherhood with the Sage Thiuvalluvar. Her poems are found in the Eight collections of the last Sangam. The Second one was-the woman who did- a self made woman unmarried, belonging to a Vaniya family of Uraiyur, who came forward in her old age and was honoured by the name of Avvai. She was the contemporary of Kamban the poet.

Editor The Tamilian Antiquary.
No. 5, 1909.

ஔவையார் என்னும் பெயருடன் இரண்டு புலமை மெல்லிய
லார் இருந்தனர். ஒருவர்—முதலாமவர், கடைச்சங்க காலத்தி
னரும், பாணரகத்து வளர்ந்தவரும் திருவள்ளுவ முனிவருக்கு
உடன் பிறப்புரிமை கொண்டவருமாவர். அவரது பாடல்கள் சங்க
விலக்கியங்களாகும் எட்டுத் தொகையிற் சேர்ந்துள்ளன. இரண்
டாமவர் மணமியற்றிக்கொள்ளாதவர் ஒருவாணிய குலத்தினர்,

213/10-24

உறையூர்ப் பதியினர், வயதினாலும் கல்வியாலும் முதிர்ந்திருந்த மையான் ஔவை என்னும் பெருமைப் பெயரிடப்பட்டனர். பிந்தியவரோ கவிச் சக்கரவர்த்தியான கம்பருக்கு ஏக காலத்தினர்.

பத்திராதிபர்: Tamilian Antiquary.

மேற்கண்ட கட்டுரைகளால் பன்னிரண்டாவது நூற்றாண்டில் தமிழ்மொழி வளர்ந்த உண்மை நன்கு நம் மனத்திற் பதியவேண்டும். இனி ஒட்டக்கூத்தரோடு இணைந்த புகழேந்தியையும் கம்பரையும்பற்றி ஆராய்வோம்.

குலோத்துங்கனது காலம் பி. பி. 1070 முதல் 1118 வரை தலைநகர் திருவாரூர்; அவன் காலத்தவரே சேக்கிழார் நாயனாரும் ஜயங்கொண்டாரும்; அவன் மகன் விக்கிரமசோழன்; அவனது ஆட்சி கி. பி. 1118 முதல் 1135 வரை இவன் காலத்தில் ஒட்டக்கூத்தர் புலவராக அவைக்கண் வீற்றிருந்தார். விக்கிரமசோழன் தனக்கு நல்கிய சீரினாலும் சிறப்பினாலும் அச்சோழனுக்கு உலாப் பாடியுள்ளார். அந்நூலின் 69-ஆவது கண்ணி,

"குலையப் பொருதொருநாட் கொண்ட பரணி
மலையத் தருந்தொண்டை மானும்"—

என்று காணப்படுகின்றது. கலிங்கத்துப்பரணி நூலும், அதன் இருதயமான கலிங்கப்போரும், வெற்றியும், பின்னதற்குக் காரணமாகி நின்ற கருணாகரத் தொண்டைமானும் விளங்கும் உண்மை தெள்ளிது. இதில் விக்கிரமனைப் புகழ்ந்து பாடிய உலாவின் முதல் முப்பது கண்ணிக் கருத்து கலிங்கத்துப் பரணியின் இராச பாரம் பரியத்தைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ள உண்மை அவற்றைப் படித்தவருக்கு இனிது விளங்கும். அதனாலும் பரணிக்குப் பிந்தியது விக்கிரமசோழன் உலா என்பது பொருத்தமுடையது.

விக்கிரமனுக்குப் பின் அரசாண்டவன் இரண்டாவது குலோத்துங்கன், 1135—1149. இவன் விக்கிரமனுக்கு மகன். குமார குலோத்துங்கன் என்னும் திருநாமமுமுடையவன். தன் தந்தை காலத்திலேயே ஒட்டக்கூத்தரைத் தனக்குக் குருவாகப்

பெற்றான். தனக்குத் தன் தந்தை அரசை நல்குங் காலம் கிட்டியது. ஒட்டக்கூத்தரும் பொலிவுற்ற காலம்;

அத்தக வினனு வன்னே
ஞங்கவிர் தருமங் நாளிற்
சுத்தநீர்ப் பொன்னி நாட்டுச்
சோழனைச் சுரார்வந் தெய்தி
மத்தக வேழ மூரு
மகபதி யழைத்தா னென்று
ரித்தரை யாசை நீத்தி
டிமைப்பினி னேகி னுனே.

விக்கிரமன் விண்ணுற்றான். (புலவர் புராணம்)

அன்னவ னடைந்த போதே
யவன்றரு குலோத் துங்கப்பேர்
மன்னவன் றனக்குத் துங்க
மறையவர் பலருங் கூடிப்
பொன்னவ மணிவாய்ங் துள்ள
புதுமுடி யொன்றை முன்னூல்
சொன்னமங் திரநீ ராட்டிச்
சுபமுறப் புனைந்திட் டாரே. (ஷை)

இது தெரிந்து ஒட்டக்கூத்தர் ஆண்டுச் சென்றார். ஒரு கவியின் இரண்டடியை முடித்தார்; உடனே குலோத்துங்கன்

பிரானென வலக்கை தூக்கிப்
பேசரைக் கவிமுற் றமுன்
னிராகவ னனையான் போது
மெனத்தடுத் தியற்பா வல்லீர்
பராவுமின் னவன்றாள் சூடும்
பண்பினின் ஞனென் றென்னைச்
சுராசுரர் சொல்வா ரென்றப்
பாதியுஞ் சொன்னன் மன்னே! (ஷை)

எத்தனை புலவ ரோமுன்
இறைவரை வசஞ்செய் தூற்று
ரத்தனை பேரு ளாரு
மருந்தமி ழொட்டக் கூத்த
னைத்தவர் முடிமேற் றந்தா
ளுறவைத்த தில்லை யில்லை
யித்தனை யதிட்ட மன்னோற்
கிசைந்தமை யேற்றந் தானே.

இவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்தவர் ஒட்டக்கூத்தர்; இரண்டாவது கவிச் சக்கரவர்த்தியாகிப் புவிச் சக்கரவர்த்தி யினும் பொலிவுற்று விளங்கினர்.

தம் மாணவனும் மணிமுடி மன்னவனுமான இரண்டாவது குலோத்துங்கனுக்குத் திருமணம் இயற்றத் திருவுளம் பிறந்தது கூத்தீருக்கு; பாண்டி மன்னனை யடைந்து அவன் மகளை மகள் பேசித் திருமணமும் இயற்றி யருளினர். அம்மகளுக்குச் சீதன மாக வந்த புலவரே புகழேந்தி; ஒட்டக் கூத்தருடன் உறவின்றி உளைந்து சிறையுற்று வருந்தினர். துன்புறு நாளுஞ் சிலவே யாதலால் பின்னர் நன்னுளுறப் புகழேந்தியார் கோப்பெருந் தேவிக்கூடல் தீரப் பாடல் பாடிப் பருவரல் நீங்கினர். சுகஜீவியம் பெற்றதும் அரசனிடம் விடைபெற்று மள்ளுவ நாட்டு முரணைச் சந்திரன் சுவர்க்கியை யண்மி ஆதரவு பெற்றார். ஒட்டக்கூத்தர் விதைத்த தீமை விளைந்து விட்டது. கம்பரைத் தருமமே அழைக்கச் சென்றது.

குலோத்துங்கன் மனமிக மகிழ கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் களிப்பென்னும் கடலில் ஆழ்ந்திருந்தனர். எளிய தமிழ்ப் புலவரை தலையை முடிந்து வெட்டுவதில் அவருக்கு மிகுந்த இன்ப முண்டு.

"தவமுத்தமிழ்ப்பேறு பொன்னென்ப வெய்திற் றருக்குற்றிடா
தெவருக்கு மார்வஞ் செயத்தக்க குணமெய்த லினிதாகுமே"

அக்காலத்தில் "எழில்வாணி" திருவருளால் இசை பெற்ற கவிச் சிங்கத்தின் கர்ஜனை எட்டுத் திசையினும் முட்டி எதிரொலி

கொடுக்க ஆரம்பித்தது. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத குலோத்துங்கன் சிவநேயச் செல்வன். சோழ மன்னருக்கே குலதெய்வம் நடராஜர். முதலாவது குலோத்துங்கன் காலத்திற்றான் வைணவ ஆசாரியர் இராமாநுஜர் சோழ மண்டலத்தைவிட்டுப் போகத் துறத்தப்பட்டார். அவரது சீடனை கூரத்தாழ்வானைக் கண்ணைப்பறித்தவனும் அவனே. பின் விக்ரமன் காலத்தில் இராமாநுஜர் மீண்டார். இவன் திருமாலிடத்துத் துவேஷமற்றவன். இவனுக்கு மகனும் ஒட்டக்கூத்தனுக்கு மாணுக்கனுமான இரண்டாவது குலோத்துங்கனே தில்லைக்கோவிந்த ராச விக்கிரகத்தைக் கடலி விட்டவன்; இவ்வெற்றியை

"புவனி முழுதுடைய பொற்றொடியுந் தானும்
அவனி சுரர்சுருதி யார்ப்ப—நவநிதிதோய்ந்
தேத்தற் கருங்கடவு ளெல்லை யிலானந்தக்
கூத்தைக் களிகூரக் கும்பிட்டுப்—போற்றினமேற்
றில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொடுத்தெடுத்து" என்றும், *

(குலோத்துங்கனுலா)

திருவே திருமாலே

"சூட்டத் திருமகுடஞ் சூட்டியபின்—னாட்டு*
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைந்து
முன்னிற் கடல்களில் மூழ்குவித்த—சென்னி
திருமகன் சீராஜராஜன்." என்றும்,

(இராசராசனுலா)

முன்றிற்கிடந்த கருங்கடல்போய்
முன்னைக் கடல் புகப்பின்னைத் தில்லை
மன்றுக் கிடங்கண்ட கொண்டல் பெற்ற
மரகதமேருவை வாழ்த்துவனே" (தக்கயாகப்பரணி)

ஒட்டக் கூத்தர் அவனைப்பாடியுள்ள குலோத்துங்கன் உலாவிலும் அவனுக்கு மகனான இராசராசனைப் பாடிய இராசராச

னுலாவிலும், பரணியிலும் புகழ்ந்துள்ளார். இவர்களது முன்னோரது சிவநேய மிகுதியை ஜயங்கொண்டார்,

''முக்கண் வெள்ளி மலையோன்
மன்றினட மாடியருள் கொண்டு'' என்று

286-ஆவது தாழிசையிலும், ஒட்டக்கூத்தர்,

''— முன்னை
42. மறைக்கொழுந்தை வெள்ளி மலைக்கொழுந்தை மௌலிப்
பிறைக் கொழுந்தை வைத்த பிரானைக்—கறைக் களத்துங்
43. செக்கர்ப் பனிவிசும்பைத் தெய்வத் தனிச்சுடரை
முக்கட் கனியை முடிவணங்கி''—என்று

விக்கிரம சோழன் உலாவிலும்,

—''பார்த்திபர்தங்
,,
தொல்லைத் திருமரபுக் கெல்லாந் தொழுகுலமாந்
தில்லைத் திருநடனஞ் சிந்தித்து—''

என்று இராசராசனுலாவிலும் விளக்கியுள்ளார்.

ஒட்டக்கூத்தரால் பொலிவுற்ற குலோத்துங்கனுக்குக் கம்பரைக் காண உண்டான ஆத்திரம் இயல்பேயன்றோ? கம்பரும் தம் பெயர் காரணமாகவே கச்சித் திருவேகம்பரை நினைப்பூட்டும் கருவி; முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவி; திருக்குறள், சிலப்பதிகாரம், திருவாசகம் இவற்றைப் புகட்டும் சங்கு—தமிழ்ப் பண்டை நூற் களஞ்சியம்—ஏவாத ஊண் விரும்பும் ஏந்தல்—காலவெள்ளத்தாற் கரைந்தழியாமல், உலகின் பழக்க வழக்கங்களைப் பிரதிபலித்துக் காட்டும் பளிக்குமலை. அதனால் 'அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்' என்றதற் கிலக்கியமாக அவனால் அழைக்கப்பட்டு அபிமானிக்கப்பெற்றார்.

''கம்பர் அரசனபிமானி'' என்ற ஓசை தமிழ் நாடெங்கும் எழுந்தது. பொன் ஆடை பணி யானை முதலாய அரசனாற் பெற்றது கண்டு விரைவில் திருமணமும் நிறைவேறியது கம்பருக்கு. இவரை வளர்த்த ஒச்சருடைய தவமே தவம் என்று எவரும் புகழ்ந்து கொண்டாடினார்கள். கம்பரும் ஒட்டக்கூத்தருடன் சோழனுக்குக் கண்போல விளங்கினார்.

இரண்டாவது குலோத்துங்க சோழன் (1135—1149) இப்புலவர் இருவரோடு அளவளாவி மகிழ்வுற்றிருப்புழி, புலவீர்'

"ஆன வென்றி இராகவன் ஆடலை
மான வண்டமிழ் கொண்டு வகுத்திர்" என்று

வேண்டிப் பொருள் ஈந்து அவர்களை உபசரித்தான். அன்று முதல் ஒட்டக்கூத்தர் இராமாயணம் பாட ஆரம்பித்தார்; ஆனால் கம்பரோ அப்பொருளைக்கொண்டு துய்த்துச் செருக்கிக் காலத்தைக் கழிக்கலானார். காலங் கழிபவே குலோத்துங்கன் அவர்களை அழைத்து எத்தனை கவிகள் அவர்கள் தனித்தனியே எழுதியுள்ளார்கள் என்பதை விசாரித்தான். அரசனுடைய திருவுளத்தில் இருவரும் ஒருவாறு பாதிக் கதையையேனும் பாடி முடித்திருப்பாரெனக் கொண்டிருந்தான். அதற்கு ஒட்டக்கூத்தர் உழைத்து வருவதால் உண்மையான கவித்தொகை பாடி முடிந்தது இத்தனை என்று வாய்விட்டுச் சொல்லு முன்னரே கம்பர் 'சேதுபந்தனம் வரை செப்பியுள்ளேம்' என்று சோர்வின்றித் தெரிவித்தார். எடுத்துக்கொண்ட தொழிலின் இயல்பை உணர்ந்த ஒட்டக்கூத்தர் அக்கூற்றிற் சற்றே ஐயுற்றார்.

"The promises of authors are like the vows of lovers; made in moments of careless rapture, and subject, during the long process of fulfilment, to all kinds of unforseen dangers and difficulties" என்ற தொடக்கத்த உரைகளின் உண்மையைத் தம் அநுபவத்தால் உணர்ந்தவரன்றோ அவர்? அதனால், அப்படலத்தில் ஒரு பாடலைப் புகலும்படி கம்பரை வேண்டினார். கம்பரோ கலைமகளின் திருவருட் பொக்கிஷம்; உடனே, "குமுதனிட்ட குலவரை கூத்தரிற்" என்னுந் தொடக்கத்துப் பாடலைப் பாடி முடித்தார்.

அதுமுதலாக நடந்த கதையை விரிக்க வேண்டாமல் சுருக்கி எழுதுகிறேன். பாடலைக் கேட்டுப் பண்டிதரும் பாமரரும் பரவசமாயினர். கூத்தர் உள்ளம் கொதித்து "இளமையோர்க் கதியிச்சை கொண்டாய் கொல்" என்று அளவுறாத அகந்தைகள் பேசிக் கலைமகளை வெறுத்தார்.

"மன்னன் சிந்தை வருத்தமு மாறுகோ
லொன்னலன்சின மெய்தியு ஞற்றலு
நனைகர்க் கணுற்றார் பகர் ஞாயமு
முன்னலாலுள மொல்கிய கம்ப"ரும்.

‘எத்திறத்திலு மிராம காதை கவிபாதல் செய்வனென’ எண்ணினார். அந்நூலை முடிக்கத் தகுந்த சாதனங்கள் நிறைந்த திருப்பதியை நாடினார். திருவாரூரிலிருந்து புறப்பட்டவன் வடதிசைக்கண் ஏகினார். மிகுந்த செல்வத்தோடு ஒப்புயர்வற்ற வள்ளலைத் தேடினார். "ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா, ஊக்கம் உடையான் உழை" என்பது பொய்யா மொழியன்றோ?. சீரால்உயர்ந்த சுந்தரமூர்த்திநாயனாருக்குத் திருவருள் புரிந்த ஈசன் கோயில் கொண்ட திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்தவர் தமக்கும் அதுவே அருட்டுறை எனக்கொண்டார்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாரும்
தொழுதுண்டு பின்செல்வார்"

என்ற தெய்வக் கருத்து கம்பர் உள்ளத்தில் கதித்தோங்கி வளர்ந்தது. அத்தொழிற் பயிர் முயற்சியோனாகிப் பாரில் இத்தினம் இவர்க்கு மிக்கவர் இலலை எனப் புகழ் பெற்ற சடையனைத் தெரிந்தார் கம்பர். ‘காரினம் கடலினைக் குறித்தெழு கவின்போர’ அவனை நோக்கிக் கடுகி ஏகினார். வயலிடத்து உழுது நின்ற வள்ளலும் கம்பரைக் கண்டு களிகொண்டு அங்குக் கொண்டு வைத்திருந்த உணவையே அவருக்கு அளித்து அரும்பசியொழித்து சில ஏவலாளருடன் கம்பரைத் தன் இற்புகக்கொண்டனான். பின் விலை வகுக்கரிய உதவி நாடோறும் கம்பருக்கு நல்கினான்.

கம்பரும் பாயிரத்தினையும் இராம கதையையும் அவன் உதவி தன்னை ஊக்க இனிது முற்றுவித்தார். தாயினும் பெருகு கருணையை வித்வ ஜனங்கள் மீது பொழிந்த சடையனை ஆயிரங்கவிகளுக்கு ஓர் பாடலில் அமர்த்தினார். அவன் அவைக்கண் ஏரெழுபதையும் பகர்ந்தார். அந்நூலின் பாயிரத்து அக்கால நிகழ்ச்சி

யைக் குறித்து "ஆழித்தேவர் கடலானூர் அல்லாத்தேவர் அம்ப லத்தார்" என்று வியந்தார். பின் அந்நூலைச் சடையன் கேட்டு மகிழ்ந்து புலவர் பெருமானுக்குப் பெரும் பரிசு நல்கினன். அதனைப் பெற்று மகிழ்ந்த கம்பர் திருவரங்கப்பெருங் கோயிலில் "படிகொண்ட கீர்த்தி இராமாயண மென்னும் பக்தி வெள்ளம்" குடிகொண்டு பொங்கித் ததும்பி அடியாரை வளர்க்கும் மண்டபத்தே தாம் பாடியுள்ள "இராமாவதாரத்தை"யும் அரங்கேற்ற ஆசைகொண்டு ஆண்டுச் சென்றார். அங்கிருந்தவர்கள் "நொண்டி நாடகம் நடித்திடும் தில்லைச் சிற்றம்பலத்து மூவாயிரர் இந்நூலை ஒப்பிடின் நீவிர் கொணர்திர்" என்று உரையாடிக் கம்பரை அனுப்பி விட்டார்.

தில்லைக்குச் சென்று கம்பர் தம் கடவுட் டன்மையாதிய கல்யாண குணங்களை அங்குள்ளவர்களுக்குக் காட்டிக்கொடுத்தார். தில்லை மூவாயிரரும் "இந்த நூல் முழுதும் அருள் மொழித் திரள்" எனத்துணிந்து இனிதியம்பினர். உடனே கம்பர் அன்னவர்க்கும் அணியம்பலத்துறும் அரற்கும் அன்புசெய்து அகன்று போய்ப் பொன்னரங்கர் எதிர் ஓதினர். அப்பிரான் வேண்டக் குருகூரிற் றோன்றிய குலக்கொழுந்தை அந்தாதி கொண்டு பாடிப் பணிந்தார். இராமாவதாரத்தையும் இனிது அரங்கேற்றினர். அச் சபைக்கு வந்திருந்த சோழனும் (குலோத்துங்க சோழனும், 1135—1149) கம்பரை மகிழ்ந்து அழைத்துக்கொண்டு போய் முன் வாழ்ந்தவாறு அமரவைத்தான். ஒட்டக்கூத்த ரியற்றிய உத்தர காண்டத்தை மட்டும்தம் நூலுக்குத் துணையாகக் கொண்டார். அது முதலாக

"இம்பரிற் புலவர் குதிகொள்
வாரிணியெனப் பரிந்தோர் கவியோதினன்
கம்பனன் னவன திட்டமிஞ்சியது
காவலன் பெரிது மாவலாய்க்
கொம்பணிச்சிவிகை யேறிபிக்கவிஞர்
கோமகன் செல்வழி தோறுமியான்
பைம்பயிர்ப்பகுதி கொள்கிலேனிதுமெ
யென்றொருத்தரவு பண்ணினன்" (புலவர் புராணம்(

இவ்வுண்மையைத் திரு செல்வ கேசவராய முதலியாரவர்கள் தமது கம்பநாடரில் 94 ஆம் பக்கத்தில் "கம்பர் போனவழி கண்டு கழித்தது" என்ற தலைப்பின் கீழ் விளக்கியிருக்கிறார்.

சீரும் சிறப்பும் செழித்தோங்கி நம் செந்தமிழ்ப் புலவரை உயர்த்த ஆரம்பித்தன. தீங்கவியையே செல்வப் புதல்வனாகச் சீராட்டி வளர்க்கும் கம்பருக்குத் தேவி திருவருளால் மாமணிபோல் ஓர் சிறுவன் வந்து தோன்றினான். "மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட்பேறு" அன்றோ? அச் செல்வ மழலைக்கு அம்பிகாபதி எனும் திருநாமம் இட்டார். அக்குமாரனும் "கலையாழிக் கதிர்த் திங்கள் உதையத்திற் கலித்தோங்கும் அலையாழி என வளர்ந்தான்". வயது "ஒருபதோடு சில" கழிந்த தம் காதற் திருக்குமரன் தம்மைத் தொடர கம்பர் சோழனது அவையுட் புகுந்து பொலிந்து விளங்கினார். குலோத்துங்கராஜன் அம்பிகாபதியாகிய பாலசூரியனைப் பார்த்தான். திருமுகமலர்ந்து "இவனும் செம்பதக்கவி சொலும் கொலோ" எனச் செப்பினான். "ஆம்" என்ற கம்பர் சொல் காவலனது உள்ளக்கமலத்தை விகசிக்கச் செய்தது. அருமையுடனே "உம்பர் போற்றும் நெடுமால் உறங்குமிடம் ஒருங்கு உரைத்தி" என ஓதினான்; அம்பிகாபதியும்

"வேங்கடத்தில்வட வாலில்வேலையினி
லென்றபோதுதடை மேவலு
மாங்கவட்கருதி யப்பனாவெனவ தட்டினான்" (கம்பன்)

என்பர் புலவர் புராண முடையாரும்.

(அன்பர்களே!)

அப்பனா என்ற தொடருக்கு என்ன பொருள் என்று பார்ப்போம். பாடல் தடைபட்டுழி பார்த்திபன் அவைக்கண் பரிந்து கம்பர் செய்த சூழ்ச்சி யிது என்பதை எளிதிற் றுணியலாம். நீ என் மகனா? 'குலவிச்சை கல்லாமற் பாகம் பெறும்' அன்றோ? என்று வருந்தியதாகக் கூறுவர் பலர். அத்தொடர் யாராலேனும் ஆளப்பட்டுளதோ என்னும் உண்மை இப்பொழுது

ஈண்டு ஆராய்ச்சிக் குரியது. தமிழ்ப்புலவர்கள் தம்து மாணவர் களுக்குச் சில அந்தாதிகளை ஆரம்பத்திலேயே கற்றுக்கொடுத்து வருவது இன்றும் கண்கூடாகக் காணப்படும் உண்மை வழக்கே. அது சான்ருக ஆராயும்போது பிள்ளைப்பெருமாளய்யங்கார் பாடிய திருவேங்கடத்தந்தாதியில்

"என்னப்ப ஞகத்துப் பொன்னூலன்
வேங்கடத் தெந்தைதுயில்
மன்னப்ப ஞகத்துக் கஞ்சமிலன்
முன்பான் மணிசிதறி
மின்னப்ப ஞகத்துப் பாய்ந்தான்
கதையன்றி வெவ்விணைகள்
துன்னப்ப ஞகத்துப் பொய்ந்நூல்
புகாவென் றுளைச்செவிக்கே"

என்னும் பாடலைக் கம்பர் படித்தும் தம் மகனுக்குப் படிப்பித்தும் இருந்தார் என்றாகிக்கலாம்.

குலோத்துங்கன் திருமாலின் விக்கிரகத்தைக் கடலிலிட்ட தைக் குறித்து அக்காலத்துப் புலவர்கள் வியந்துள்ளது போலவே பிள்ளைப் பெருமாளய்யங்கார் காலத்திலும் ஒரு நிகழ்ச்சி உண் டென்று அவர் பாடலால் விளங்குகிறது. அதாவது

"தனித்தொண்டை மானிலத் தேபுரி
வார்க்கருள் தாளுடையாய்
தொனித்தொண்டை மானெடு வாய்பிளந்
தாய்துங்க வேங்கடவா
முனித்தொண்டை மான்கையிற் சங்காழி
நல்கியென் மூரற்செவ்வாய்க்
கனித்தொண்டை மான்கையிற் சங்காழி
கோடல் கருமமன்றே."

இதன் உண்மையைப்பின் விளக்கியிருக்கிறேன் பக்கம்

பிள்ளைப் பெருமாளையங்கார் பன்னிரண்டாவது நூற்றாண்டி னிடையில் வாழ்ந்திருந்தவர் என்பது ஆன்றோர் முடிபு.

செந்தமிழ் இரண்டாந் தொகுதியின் 98-ஆவது பக்கத்தில் "அன்றியும் கம்பர் காலம் 'எண்ணிய சகாத்த மெண்ணூற் றேழின்மேல்' (கி. பி. 885) எனவும், நாதமுனிகள் சந்நிதியில் கம்பராமாயணம் அரங்கேறிய தெனவும் பெருவழக் குண்மையால் அம்முனிவர் காலமாக ஆசாரியரவர்கள் குறிப்பிட்டது ஏற் புடைத்தேயாம். 'எண்ணிய சகாத்த முந்நூற்றேழின்மேல்' எனச் சிலர் எழுதிய பாடம் கம்பரை அதிகப் பழையவ ராக்கு தலால் அது கொள்ளத்தக்க தன்று.

இனி, ஒட்டக்கூத்தராற் குலோத்துங்கக் கோவை பாடப் பெற்றவன் சக. 985 (கி. பி. 1063)-இல் பட்ட மெய்திய குலோத் துங்க சோழ னென்றுகொண்டு, அக்கூத்தர் காலத்தவராக வழங் குங் கம்பரைக் கி. பி. 11-ம் நூற்றாண்டின் முற்பகுதியினராகத் துணிவார் பலராவர். ஆயின் அக்கொள்கை கம்பர்காலம் சக. 807 எனவும், அவர் நாதமுனிகளுடனிருந்தவ ரெனவும் வழங் குஞ் செய்தியோடு மாறுபடுகின்றது. இம்மாறுபாடு பற்றி அச் செய்திகள் பிற்காலத்துச் சிருஷ்டிக்கப்பட்டன வென்று நாம் கரு தற்கு நியாயங் கிடையா. இனி, ஸ்ரீமத் வி. கனகசபைப்பிள்ளை யவர்கள் ஒட்டக்கூத்தராற் பாடல் பெற்றவன் விஜயாலயன் பேர னும், ஆதித்தன் மகனுமானவ னெனவும், அவனுக்குக் குமார குலோத்துங்க னென்று (Vide Mr. V. Kanakasabhai Pillai's contribution, p. 115, Vol. VIII Madras Review) பெய ரெனவும், அவன் காலம் கி. பி. 8, 9-ம் நூற்றாண்டுகளின் ஈறு முதலு மெனவும் "செந்தமிழ்" முதற்றொகுதி 6 ஆம் பகுதியில் ஆதித்த சோழன் சரித்திரத்துக் குறித்துள்ளார்கள். ஆனால் அவர்கள் அங்ஙனங் கருதியதற் குற்ற காரணங்களை அதனுட் காட்டவில்லை. ஆயினும், பிள்ளையவர்கள் அவ்வாறு கூறுவார் களாயின், அவற்றிற்குப் பல காரணங்கள் இருத்தல் கூடுமென்றே நாம் கருதல் தகும். அக்காரணங்கள் எத்தகைய வாயினும் ஒட்டக்கூத்தர் பாடல் பெற்றவனாகப் பிள்ளையவர்கள் கருதிய குலோத்துங்கன் காலம், அக்கூத்தர் காலத்தவராகிய கம்பர்க்கு

வழங்கும் சகாப்தத்தோடும், நாதமுனிகள் காலத்தோடும் மாறுபடாது பெரிதும் ஒன்றுதலால் அதுவே பொருத்தமுடைத்தாகத் தெரிகின்றது. அன்றியும் முற்காலத்து நூல்களையே எடுத்தாண்ட புறத்திரட்டென்னும் நூலிற் கம்பராமாயணச் செய்யுட்கள் தொகுக்கப் பட்டிருத்தலும், கி. பி. 11-ம் நூற்றாண்டி லிருந்தவரும் வீரசோழிய வுரையாசிரியருமாகிய பெருந்தேவனார் 'கம்பனாரிடைப் பெருமைபுளது (வீரசோழியம், வேற்றுமைப் படலம், 7 ஆம் செய்யுளுரை) எனவும், நச்சினார்க்கினியர் 'கம்பர்' (தொல். எழுத். நூன்மரபு—5-ம் சூத்திரவுரை) எனவும் உதாரணங்கள் காட்டியமையும் கம்பர்க்குள்ள பழமையைக் குறிப்பிக்கின்றன. கி. பி. 11-ம் நூற்றாண்டே கம்பர் காலமாயின், அக்காலத்துச் சிறப்புற்று விளங்கிய பெரியபுராணம், கலிங்கத்துப்பரணி முதலியவற்றைப் புறத்திரட்டுடையார் எடுத்தாளாதிரா ராதலின், அக்காலத்துப் புலவரினுங் கம்பரும் புறத்திரட்டாரும் முற்பட்டவரென்பது தேற்றமாம். இவற்றால் நாதமுனிகள் கம்பரிருந்தது 9, 10-ம் நூற்றாண்டுகளின் இடைக்கால மென்பது தெள்ளிது.' என்று ஸ்ரீ. உ. வே. மு. ராகவையங்கார் ஸ்வாமி பெரியாழ்வார் கால நிருணயம் என்னும் தலைச் சாத்திட்ட கட்டுரையிற் குறித்துள்ளார்.

மேலும் அத்தொகுதி 402-ம் பக்கத்தில், 'புகழேந்தியொட்டகூத்தர் என்னும் தலைச்சாத்தின் கீழ்

"இவரது (புகழேந்தியாரது) நளவெண்பாவிற் கண்ட அரிய இனிய பாடல்கள் சில "நளன்கதை" என்னும் பெயராற் புறத்திரட்டு என்னும் நூலின்கட் சேர்க்கப்பட்டுள்ளன" என்று ஸ்ரீ. உ. வே. ரா. ராகவையங்கார் ஸ்வாமியும் குறித்துள்ளார்.

"எண்ணிய சகாத்த மெண்ணூற்றேழின் மேல்" என்ற பாடலிற் குறித்த காலத்தைப் பற்றித திருவாளர் P. சுந்தரம் பிள்ளையவர்கள் துணிந்து 'a date prefixed by some unknown hand' என்று அறுதியிட்டுள்ளார்கள். (vide Tamilian Antiquary). நாதமுனிகள் சந்நிதியி லரங்கேற்றிய வுண்

மைக்கு நாதமுனிகளின் காலத்தைப்பற்றி டாக்டர் கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார் எழுதியுள்ளவற்றைக் கீழே குறித்திருக்கிறேன்.

நாதமுனிகள் கம்பர் இருந்தது ஒன்பதாவது நூற்றாண்டு என்பாருக்கு விடையாக புராதன இந்தியாவிலிருந்து ஒரு பாகத்தை ஈண்டுக் குறிக்கிறேன்.

It certainly would be unreasonable to ascribe Nathamani to the earlier half of the tenth century. A D. This is exactly the conclusion warranted by the proper understanding of the traditional accounts, which is that Nathamuni was born in A. D. 582 and that he was in what is called Yoga Samadhi for 340 years. This would give the date A. D. 922 for the death of Nathamuni, which is not at all improbable, taking all circumstances into consideration. But why did the hagiologists then ascribe this long life and long death in life to Nathamuni. The explanation is not far to seek. They believe and the Vaishnavas do believe even now, that there was an unbroken succession of these saints and unfortunately they fonnd a gap between Nathamuni and the last Alwar. This they bridged over in this clumsy fashion. If Kalhana the professed historian of Kashmir did the same with respect to the early rulers of Kashmir in the first century A. D. is it wonderful that their hagiologists fell into such a trap?

கம்பரை 9, 10, ஆவது நூற்றாண்டினராக்கியும் அதற்குச் சான்றாகப் புறத்திரட்டுடையாரைப் பதினோராம் நூற்றாண்டின ராக்கியும், அந்நூலிலேயே நளவெண்பாப் பாடல்கள் கோக்கப் பட்டுள்ள வுண்மையை விளக்கியுமுள்ள பெரியோரே விக்கிரம சோழன் கி. பி. 1118 முதல் கி. பி. 1132 வரை அரசாண்டவன்

என்றும், விக்கிரம சோழனும், அவன் மகன் குலோத்துங்க சோழனும், அவன் மகன் இராசராசசோழனுமே கூத்தர் பாடல் கொண்டவராவர் என வுணர்க.'' என்றும் வலியுறுத்துகிறார். பன்னிரண்டாவது நூற்றாண்டே இம்மன்னர்களது காலமாம். இவ்வுண்மையைச் சோழ மன்னராட்சிக்காலம் என்னும் தலைப் பின்கீழ்க் குறித்திருக்கிறேன்.

பட்டினப்பாலையைக் குறித்துள்ள ஜயங்கொண்டாரும் அவரது பரணியைக் குறித்துள்ள கூத்தரும் கம்ப ராமாயணத்தைப் பற்றி ஒன்றுங் குறித்திலாமை யானும், கூத்தர் உத்தரகாண்டம் பாடியுள்ள உண்மையானும், கம்பரையும் கூத்தரையும் இணைத்துப் புகழுங் கதைகளானும், பரணியின் இராசபாரம்பரியத்தையும் விக்கிரமசோழனுலாவின் முதல் முப்பது கண்ணிகளையுமொட்டியே கம்பரது குலமுறை கிளத்துப்படலம் விளங்குவதானும், பரணிக்கும் உலாவுக்கும் பிந்தியது கம்பரது இராமாயணம் என்று கொள்ளுவது சால்புடைத்து. ஆனால் பரணியில் இராமாயணத்தைச் சயங்கொண்டார் குறித்திருத்தலான் பரணிக்கு அது முந்தியதெனலாகாதோவெனின், வடமொழியில் வல்லுநராகிச் சோழவரசனுக்கு 'வளமொடுபகயன விதிச்சடங்குங்' கண்ட சயங்கொண்டார் வடமொழி இராமாயாணத்தில் மிகுந்த பற்றுள்ளவர் என்பது இனிது விளங்கும். புறநானூற்று 378 ஆஞ் செய்யுளைப் பாடிய ஊன்பொதி பசுங்குடையாரை யொத்து இராமசரித்திரத்தை ஞாபகத்தில் வைத்திருந்தவராவர் ஜயங்கொண்டார் என்பது தெள்ளிது—இனி, கச்சித் திருவேகம்பரையே கம்பர் என்று பெருந்தேவனாரும் நச்சினார்க்கினியருங் கொண்டுளா ரெனலும் இழுக்காகாது, தேவாரத்திலும் திருவாசகத்திலும் அப்பெயர் காணப்படுதலான்.

இலங்கை யரசைத், துலங்க வூன்றும்,
நலங்கொள் கம்பன், இலங்குசரணே—சம்பந்தர்,
கற்றை வார்சடைக கம்பன்; பெரிய கம்பன்;
கண்ட நஞ்சுடைக் கம்பன்; நல்ல கம்பன்; கள்ளக் கம்பன்;

—சுந்தரர்

மேற்கூறியவற்றால் கம்பர் ஒன்பதாவது பத்தாவது நூற்றாண்டினரல்லரென்பது இனிது விளங்கும். இராமாநுஜர் காலமே கி. பி. 1017 முதல் 1137 வரை என்ற சரித்திரக்காரர் கூற்று இப்புலவர் காலத்தை 12ஆவது நூற்றாண்டுக்கு தகுதியுடையதாக்கும்.

இன்னும் பிரதாப ருத்திரனைப்பற்றி திரு. செல்வ கேசவராய முதலியாரவர்கள் கம்பநாடரில் 26, 27, 28 ஆவது பக்கங்களில் குறித்துள்ளவற்றை ஒருவாறு எழுதுகிறேன். "கம்பர் சோழனிடம் விரோதம் கொண்டு, ஆந்த்ரதேசத்தில் ஓரங்கல் நாட்டின் அரசன் ப்ரதாப ருத்ரனை அடைந்து, சிலகாலம் அவனுடைய சன்மானம் பெற்றிருந்தனர். கம்பர் ப்ரதாப ருத்ரனிடம் சென்று அவன் அடைப்பை கட்டிவரப் பாடியதாகத் தமிழ் நாவலர் சரிதையில் காட்டிய

'அவ்வனி முழுதுண்டும் அயிரா வதத்துன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
உருத்திரா உன்னுடைய ஓரங்கல் நாட்டில்
குருத்திரா வாழைக்குழாம்.'

என்ற வெண்பா இதற்குச் சான்று. சிலாசாஸனங்களின்படி இந்த ப்ரதாபருத்ரன் கி-பி. 1162-க்குச்சிறிது முன்னே தொடங்கி 1197-க்கு பின்னே சிறிதுகாலம் வரையில் அரசாட்சி செய்தவன். ஆகவே இவன் இராச ராசன் காலத்தில் இருந்தவன் என்பது தேற்றம்.

"பெரிய வாச்சான் பிள்ளை என்பவர் 'மஞ்சுலாஞ்சோலை வண்டறைமா நீர் மங்கையர்' என்ற பெரிய திருமொழிப் பாசுரத்துவ்யாக்யாநத்தில், வண்டறை என்கிறது சோலைக்கு விசேஷணமாகவுமாம்; மா நீர்க்கு விசேஷணமாகவுமாம். ஜலத்தினுடைய ரஸ்யதையாலே 'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப' தென்று ஆற்று வரவுகளிலே சொல்லுவர்களாய்த்துத் தமிழர் என்றுரைத்திருக்கின்றனர். இங்கே குறித்திருப்பது (கம்பராமாயணம், பாலகாண்டம், ஆற்றுப்படலம், 10 ஆவது விருத்தம்) 'ஈக்கள் வண்டொடு மொய்ப்ப வரம்பிகந்து' என்ற அடி. பெரிய

வாச்சான் பிள்ளையின் ஜனனகாலம், கலியுகம் 4329, அதாவது கி. பி. 1228. இதனால் கம்பர் 13 ஆவது நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பது பெறப்படும்." (கம்பநாடர்)

கம்பர் பன்னிரண்டாவது நூற்றாண்டினரே யாவர் என்பதை வலியுறுத்த அவரியற்றிய செம்பொற் சிலையெழுபது என்ற நூலிலிருந்து ஒரு கவியை ஈண்டுக் குறிக்கின்றேன்.

" அவிக்கா தரங்கூர் புனிதர்மகிழ்ந்
தருள்வன் னியரை யாம்பாடச்
செவிக்கா ரமுத மெனக்கேட்டுச்
சிந்தை யுவந்து சீர்தூக்கிப்
புவிக்கா யிரம்பொன் னிறைநீக்கிப்
பொற்றண் டிகைபூ டணத்தோடுங்
கவிக்கா யிரம்பொன் பரிசளித்தான்
கருணா கரத்தொண்ட வன்னியனே "

இம்மன்னனே தொண்டை மண்டலசதகத்திலும்

" பண்டையோர் நாளையி லோரேழ்
கலிங்கம் பரணிகொண்டு
செண்டையும் மேருவிற் றீட்டுவித்
தோன்கழற் செம்பியன்சேய்
தொண்டைநன் னாடு புரக்கின்ற
கோனந்தித் தோன்றலெங்கள்
வண்டையர் கோனெங் கருணா
கரன்றொண்டை மண்டலமே."

என்று தெளிவாகப் புகழ் பெற்றுள்ளான். இவனையே கலிங்கத்துப்பரணியிலும்

" இறைமொ ழிந்தளவி லெழுக லிங்கமிவை
யெறிவெ னென்றுகழ றொழுதன்
மறைமொ ழிந்தபடி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ராசனே தா. 328.

தொண்டை யர்க்கரசு முன்வ ருஞ்சுரபி
தூங்க வெள்விடை யுயர்த்தகோன்
வண்டை யர்க்கரசு பல்ல வர்க்கரசு
மால்க ளிற்றின்மிசை கொள்ளவே தா. 351.

கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப நாட்டிக்
கடகரியும் வயமாயுந் தனமுங் கொண்டு
சுடர்க்கதிர்வா ளபயனடி யருளி னேடுஞ்
சூடினான் வண்டையர்கோன் தொண்டை மானே
தா. 458.

காட்டிய வேழ வணிவாரிக்
கலிங்கப் பரணிநங் காவலனைச்
சூட்டிய தோன்றலைப் பாடீரே
தொண்டையர் வேந்தனைப்பாடீரே தா. 522

இலங்கை யெறிந்த கருணா கரன்ற
னிகல் வெஞ்சிலையின் வலிகேட்பீர்
கலிங்க மெறிந்த கருணாகரன்றன்
களப்போர் பாடக் கடைதிறமின்" தா. 61.

என்று பலவாறு ஜயங்கொண்டாராலும் புகழப் பெற்றுள்ளான்.

இக்கலிங்கப்போர் கி. பி. 1112 ஆவது ஆண்டில் நிகழ்ந்தது புராதன இந்தியாவின் ஆசிரியர் தம் நூலின் 381 ஆவது பக்கத்தில்

"These works must have been much anterior to the Kalingathuparani, celebrating the conquest (rather the reconquest) of Kalingam by the Pallava General Karunakara Thondaman of Vandalur for the Chola Kolatunga" என்றும்

"Again the same Guruparamparai makes mention of the Thondaman Chakravarthi who could be no other than Karunakara Thondaman, the General of Kulotunga I and the real hero of Jayankondar Kalingathurparani" என்றும்,

215 ஆவது பக்கத்தில் It will be seen that the Vaishnava account says that the God on the Hill Tiruppathi had just lent his characteristic weapons the disc and the conch to the Thondaman Chakravarthi. This evidently refers to the conquest of Kalingam by Karunakara Thondaman " என்றும் இன்னும் பலவிடங்களிலும் நன்கு புகழ்ந்து உண்மையை நிலை நிறுத்தியுள்ளார்.

இவ்வாண்டையர் மன்னன் முதலாவது குலோத்துங்கனுக்கு மந்திரியாக விளங்கின உண்மை கலிங்கத்துப் பரணியில் இனிது விளங்குகிறது. இராஜராஜன் காலத்து அதாவது கி. பி. 1164 ஆண்டுவரை அவன்ஜீவித்திருந்திருக்கலா மன்றோ? இக்காரணமும் கம்பரைப் பன்னிரண்டாவது நூற்றாண்டினராகவே வலியுறுத்து கிறது. கம்பநாடரைப் பற்றிக் கனம் முதலியாரவர்கள் பதிப்பின் பக்கம் 94 இல் " கருணாகரப் பாண்டியன் கொடுத்த தந்தப் பல்லக்கில் " என்று குறித்திருப்பது சிலை எழுபதின் பாடலை வலியுறுத்தும். (கம்பரைச் சைவராக விளக்கும் உண்மையை மறைக்க முன் வருவார் எல்லாம் பல நூனயங்களையும் புறக் கணித்துத் தம் கூற்றையே நிலைநிறுத்த முயல்வது சகஜந்தானே) சிலை யெழுபதில் ' கலையாய் வன்னி குலோத்துங்கர் ' என்று தொடங்குகிறார். குலோத்துங்கன் காலம் என்று குறிக்க ஒருவாறு இடந்தருகிறது. இந்நூலினும் கம்பர்து சைவப்பற்று தொனிப்பது ஆராயத்தக்கது.

அரசியல் :— " விரைசெய் கமலப் பெரும்போது
விரும்பிப் புகுந்த திருவினோடும்
குரைசெய் வண்டின் குழாமிறியக்
கூம்பிச் சாம்பிக் குவிந்துள தால்
உரைசெய் திகிரி தனைஉருட்டி
ஒருகோ லோச்சி யுலகாண்ட
அரசன் ஒதுங்க தலையெடுத்த
குரும்பு போன்ற தாக்காம்பல்

73, மிதிலைக் காட்சிப்படலம்

" மான நேர்ந்தற நோக்கி மனுநெறி
போன தண்குடை வேந்தன் புகழென "
5, ஆற்றுப்படலம்.

மதம் :—

அரனதிகன் உலகளந்த அரியதிகன்
எனவுரைக்கும் அறிவி லார்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோற்
புகலரிய பண்பிற் றுமால்

இவ்விரண்டு தலைப்புகளினும் பொருத்தமுள்ள பாடற் பகுதிகளைத் திரட்டி ஆராய்வார்க்கு அக்காலத்தின் நிலை இனிது விளங்கும். அரசியல் ஓங்கவும் அரசரின் மதம் தழைக்கவும் நாட்டுக்கு இராமாயணம் போன்ற இன்றியமையாத காவியங்களே சாலச் சிறந்தன. சரித்திர ஆராய்ச்சியாளர் இவ்வாராய்ச்சிக்கும் ஒத்துழைப்பா ராயின் உண்மையை எளிதிற் பெறலாம். சுருக்கமாகச் சொல்லின், சமயப்போர் நிகழ்ச்சி காலத்தையும் கணக்கிடுமன்றோ? விஷ்ணு வர்த்தனன் காலம் பன்னிரண்டாவது நூற்றுண்டே. கி. பி. 1117-இல் இராமானுஜரது சூழ்ச்சியால் இவன் வைணவனானன். அவன் காலத்திலேயே வீர நரஸிம்மபோலாழ்வதண்டநாதர் என்னும் மந்திரியால் ஹரிஹராலயம் நிருமாணிக்கப்பட்டது. அதன் நோக்கம் வெற்றிகொண்டு பணைத்தெழுந்த வீரசைவத்தையும் வைணவத்தையும் ஒன்றாக்கி சமாதானத்தை நாட்டில்நாட்டுவதே. மேலும் திராவிட இந்து மதக் கோட்பாடுகளை ஆரிய இந்து மதக் கோட்பாடுகளினும் மேம்பாடுறுத்த அருங்கலைவிநோதர் கையாண்டதற்குப் பன்னிரண்டாவது நூற்றுண்டின் காலநிலை இடங்கொடுத்தது. இராம நாமச்சீரும் " மண்ணுற விழுந்து " " நீலமாமுகிலினன்ற " முதலிய தலைக் கோட்பாடல்களும் கம்பரை அப்பன்னிரண்டாவது நூற்றுண்டிற்கு உரியராக்குகின்றன.

"அரக்கனார்வலி
நெருக்கனாலவாய்
உரைக்குமுள்ளத்தார்க்
கிரக்கமுண்மையே"

என்று திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பாசுரம் கம்பரது திருவுள்ளத்தில் பண்டைப் பிறவி வாசனையால் வேரூன்றிப் படர்ந்து கிளைத்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து தேன் பெய்துகொண்டிருந்த உண்மை "ஆசை பற்றி யறையலுற்றேன்" என்ற திருவாக்கில் ஒளிவீசுகின்ற தன்றோ? 'இதிஹாஸ ச்ரேஷ்டமான இராமாயணத்தைப் பாடியருளிய கம்பர் அதனை அரங்கேற்று முன்னரே ஏரெழுபது, திருக்கைவழக்கம், சடகோபரந்தாதி என்னும் நூல்களை இயற்றினார். கி. பி. 1141-இல் இராமாயணத்தை அரங்கேற்றிக் கவியரசுப் பட்டமும், நாடும் பெற்ற பின்னர் கம்பர் செம்பொற்சிலையெழுபதையும் பாடி முடித்துப் பரிசுகொண்டார். அக்காலத்தில் அரசாண்ட சோழன், குலோத்துங்கனும் (1135—1149) கம்பரை முன்னிருந்த நிலைமையிலும் மிகுந்த பெருமையுடன் ஆதரித்து வந்தான். கலைமகளின் திருவருள் கம்பருக்குக் கதித் தோங்குவதைக் கண்ட மலர்மகளும் தனதருளைச் செழிக்க நல்கினாள். 'உலகெலாமீன்ற' ஒருத்தியும் ஒப்புயர்வற்ற தன்மகனை 'சான்றோ னெனக் கேட்டு ஈன்ற பொழுதினும் பெரிதுவந்தாள். அம்பிகாபதி தன் புகழ் பெருகவே, 'இவன் தந்தை யென்னோற்றான் கொல்' என்னுஞ் சொல்லால் தன் தந்தையைத் 'தக்கார்' என ஆக்கினான்.

மூரணைக் கேகிய புகழேந்தியாரும் கோவலனுக்குக் கூறிய தேவரி லுயர்ந்த ஸ்ரீராமனது கதையைக் கம்பர் பாடியுள்ளது தெரிந்து, நரரி லுயர்ந்த நளனது கதையை வெண்பாவிற் றொகுத்தார்; கம்பர் தமக்கு ஆதரவு அருளிய சடையப்ப வள்ளலைத் தம் நூலில் இலங்க வைத்ததை எண்ணி, மூரணைச் சந்திரன் சுவர்க்கியைத் தம் நூலில் விளங்கவைத்தார், கவிச்சக்கரவர்த்திகளைக் கண்போலக் காதலித்துப் போற்றுங் காவலனது அவையில் புகழேந்தியார் தம் நூலைப் படிக்கக் கருதி ஆண்டுச் சென்றார்,

திருவருளேயே துணைக்கொண்டு திகழும் புகழேந்தியார் அரசனது ஆதரவினல் அவனது அவையிற் படிக்கும்பொழுது கூத்தர் இடையிடையே பலவாறு புகழேந்தியாரை வினவிப் பொருட்சுவையை விளக்குவிந்து கண்டு கம்பரும் புகழேந்தியாருக் குதவியாக நின்ருர். அந்த நிலையிலே குலோத்துங்க சோழன் (1135—1149) தமிழ் தந்த பரம்பொருளே யொத்தான்; புலவர் மூவரும் அவரது முக் கண்களை யொத்தார். (புலவர் புராணம்)

பின் கம்பர் ஒருநாள் தமது பரிவாரம் தம்மைப் பின் தொடர்ந்து வரச் சோழனது மண்டபத்தை யடைந்தார். சோழன் அவரைக் கண்டு மகிழ்ந்து இறுமாப்புடன் "இந்த நலம் உமக்கு யாருதவியது" என்று கேட்டான்; தான் கொடுத்த சீரையும் சிறப்பையும் பராட்டித் தனக்குக் கவிமாலை சூடுவார் கம்பர் என்று கருதினுன்; அப்போது கம்பர் முறுவலித்துக்

'கந்தமலி வெண்கமல பீடமிசைக் கவினு
நந்தமது தாயுதவி ஞளென நவின்ருர்'.

இம்மொழிகளைக் கேட்ட சோழனது மனம் கொதித்தது; முகத்திற் கோபக்குறிகளே துலங்கின. உடனே கம்பர் காவலனது கலக்கத்தைக் கருதிப் பொருட்படுத்தாது,

'மன்னவனு நீயோ? வளநாடு முன்னதோ?
உன்னையறிந் தோதமிழை யோதினேன்?—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ? உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?'

என்று ஒருவெண்பாவைப் பாடி அவணின்றும் அகன்ருர்; பாண்டி நாட்டுத் துறைமுகத்தை அடைந்தார்; கப்பலேறினுர்; 'திட்டனிகர் சொற்கள் பகர் சிங்களவர் ஊர்போய்'ச் சேர்ந்தார். ஆண்டு அவர் பட்ட துன்ப மளவிட முடியாது. கி. பி. 1000 ஆண்டுக்குப் பின்னரே அத்தீவுகளில் தமிழ் வளர்ந்திருந்த உண்மை சரித்திர வாராய்ச்சியாளருக்கு இனிது விளங்கும். சின்னுள் ஆண்டுக் கழித்தார். மீண்டுங் கப்பலேறி சீரால் உயர்ந்த கன்னிவள நாட்டில் இறங்கித் தண்டமிழ் வளர்க்கும் பாண்டியனது தலைநகரத்துக்குச் சென்ருர்.

அக்காலத்தில் பாண்டியனது நாடெங்கும் கம்பனுடைய தம் கவிதையிற் கற்றோர்க்கிதயங் களித்திருந்தது கண்டார். தலை நகரத்திற் பற்பல விடங்களினும் கம்பராமாயணக் கவிகள் ஒலித்துக்கொண்டிருக்கக் கேட்டார். சொற்பொழிவு நிகழுமிடந் தோறுஞ் சென்றார்; அவர்களுரைக்கும் பொருளை நினைத்து வருந்தியும் மகிழ்ந்தும் வருவதானார். இச்செய்தி பாண்டியனுக் கெட்டியது. அவனை அணுகி நாளடைவில் உண்மைக் கம்பராக ஒளிர ஆரம்பித்தார். ஒருநாள் பாண்டியனவையில் தம் கவிகளுக்குத் தாமே உரைசெய்த தகுதிகண்டு பாண்டியன் மனமகிழ்ந்தான். பண்டிதரும் பாமரரும் புலவரைப் புகழ்ந்து அவரது சொற்பொழிவுகளுக்குக் காத்திருந்தனர். கம்பருக்கு ஆண்ட ஆபரணங்களை அரசன் நல்கினன். நல்கியும், 'என்று வந்தீர்? உமது சரித்திரத்தை உள்ளவாறு உரைமின்'' என இரந்தான். அவ்வினாக்களில் பின்னதற்குக் கம்பர், 'கற்றைவார் குழற் கலைமகள் உணர்த்தும், நான் கழறேனு' தெனச் சொன்னார். அரசனும் அன்று தொட்டுத் தன் புலவராக அமர்த்திக்கொண்டான். அக்காலத்திற்றான் நாவிதன் செய்த தீமையால் நொந்து கலைமகளைப் பணிந்து கழற்சிலம்பு பெற்றுக் காவலனை மகிழ்வித்தார். திருவருட் டெளிவாற் பாண்டியன் பணிந்து நிற்கையில் சோழனோடு வாதிட்டு வந்ததையுஞ் சொல்லி முடித்தார். பாண்டியனும் அக்குலோத்துங்கனும் புகழேந்திப் புலவரும் விண்ணுற்ற செய்தியைக் கம்பருக்கு விளங்க வுரைத்தான். புலவரின் பெருமையையும் திறமையையும் பாண்டியன் வியந்து அவரை ஆதரித்த செய்தி ஒற்றரால் சோழனுக்கெட்டியது. யானைமீதேறிப் புறப்பட்டுப் பாண்டியனது தலைநகரை யடைந்த சோழன் (குலோத்துங்க சோழன் மகன் 1149–1164) இராசராசசோழன் பாண்டியனோடு அளவளாவிப் புலவரைத் தன் யானைமீ தேற்றிக்கொண்டு தன் நகரத்தை அடைந்து முன்னிருந்தவாறு கம்பரை வாழ வைத்தான். இவ்வுண்மையால் சோழமன்னனும், பாண்டியனும் ஒற்றுமையாயிருந்தது விளங்குகிறது. இக்காலத்திற்றான் கம்பர் சரசுவதி யந்தாதியும் பாடினார். சின்னாட் கழித்துத் தம் நண்பருக்காக இலக்குமியந்தாதியும் பாடினார்.

இராசராசசோழன் நல்கிய சிறப்பா லுயர்ந்த கம்பர் அவனிடம் விடைபெற்று வேற்றிடங்களுக்குச் சென்றிருந்த காலத்திற்றான் வாரங்கல் அரசனைக் கண்டு அடுத்திருந்தார். அம்பிகாபதியின் தீவினை வளர ஆரம்பித்தது. காவலன் அதுகண்டு வெம்பிக் கம்பர் வரவை எதிர்பார்த்திருந்தான். கம்பர் வந்து கற்பித்தும் அம்பிகாபதி திருந்த வழியில்லை. அரசன் அவனைக் கொன்றான். அரசனைத் தெய்வமாகக் கருதும் தமிழர் தலைவராம் கம்பர் அரசனை வெறுத் திகழ்ந்திலர். பன்னாட் கழித்தொருநாள் தெருவில் யானை மதங்கொண்டோடியது. இராசராசனது மகன், இளவரசன் வேழத்துக்குப் பயந்து விரைந் தோடி வந்து கம்ப ரருகே அடைந்தான், அப்போது கம்பர் "கவியானைச் செயலிதென" அவனை வதைத்திட்டார். இச்செய்தியைச் செவியுற்ற இராசராசன் வாளெடுத் தோடிவரக் கண்ட கம்பர்,

" —நெடிய மாயனுய
நின்னடிக் கொன்றுயபுவி கடந்தோடற் கிடங்கொடுக்கை
நிகழ்த்து கென்றார்".

தமிழறிந்த சோழன் மகிழ்ந்து,

"இன்னமுஞ்சில் சேயிருந்தாற் கொடுத்தனது கவிபுனைவேன் என்று போனான்".

கம்பரது கொடுமை காவலனது உள்ளத்தில் பதிந்துவிட்டது; மேலும் பிரதாப ருத்திரனுதவியைத் துணைக்கொண்டு கம்பர் இன்னுந் தனக்குந் தீங்குறுத்துவரோ என்று ஐயுற்றான். பின் எவ்விதத்திலேனும் கம்பரைக் கொல்லத் துணிந்து முயன்றான். கடைசியாகக் கைதேர்ந்த சிற்பி யொருவனால் வில்லிற்றொடுத்த அம்பொன்றைப் பெட்டிக்குள் வைத்து, அப்பெட்டியைத் திறந்தவுடனே திறந்தவரது மார்பில் அது ஊடுருவிப் பாய்ந்து கொல்ல வல்ல சூழ்ச்சி செய்திருந்தான். கவியரசரை வஞ்சமாக அழைத்து அப்பெட்டியைத் திறக்க வேண்டினான் அரசன், கம்பரும் அதற் கிசைந்து பெட்டியைத் திறக்கவே—அந்தோ! விசையுடன் அம்பு அவர் மார்பிற் பாய்ந்தது; உடனே கம்பர், தம் முடிவை எண்ணி,

"வில்லம்பு சொல்லம்பு மேதினியி லம்பிரண்டு
வில்லம்பிற் சொல்லம்பே வீறுடைத்து—வில்லம்பு
பட்டதடா என்மார்பிற் பார்த்திபா! நின்குலத்தைச்
சுட்டதடா என்வாயிற் சொல்".

என்ற பாடலைப் பாடி, மனவொருமையுடன் புகழுடம்பை நிறுத்திப் புலாலுடம்பைப் போக்கிக்கொண்டார்.

இந்நிகழ்ச்சி இராசராசன் காலத்தது. அவனாட்சிக் காலம் கி. பி. 1149 முதல் கி. பி. 1164 வரை என்பது சரித்திரக்காரர் முடிபு. அதனால் கம்பர் இறந்த காலம் கி. பி. 1164-க்குள் என்று விளங்குகிறது. பிரதாபருத்திரன் கி. பி. 1162-இல் அரசாளத் தொடங்கிய உண்மையாலும், அவனாலும் கம்பர் ஆதரிக்கப் பட்டார் எனலாலும் கி. பி. 1162 முதல் கி. பி. 1164 வரையுள்ள காலமே கம்பரது இறுதிக்காலம் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் இனிது விளங்குகிறது. இம்முடிபுக் கிணங்க (Ancient India) புராதன இந்தியாவிற் குறித்துள்ளவற்றை எழுதிக் கம்பர் காலவாராய்ச்சியை முடிக்கிறேன்.

"Kamban, who there are good reasons for believing, lived in the Twelfth Century, A. D."

Page 322.

"His (Kamban's) date is probably the middle of the Twelfth Century". Page 378.

சோழமன்னராட்சிக்காலம்.

குலோத்துங்கசோழன்	....	கி. பி.	1070	முதல் கி. பி.	1118 வரை
விக்கிரமசோழன்	....	,,	1118	,,	1135 ,,
குலோத்துங்கன் (இரண்டாமவன்)	....	,,	1135	,,	1149 ,,
இராசராசன் (இரண்டாமவன்)	....	,,	1149	,,	1164 ,,

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி,—6–'30,

th